கவனிக்க - 29.08.2025 ஆந் திகதிய 2452 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வரத்தமானியின் பகுதி III மற்றும் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2453 - 2025 සැප්තැම්බර් මස 04 වැනි බ්‍රහස්පතින්දා - 2025.09.04**

2453 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (ஆ) – உள்ளூராட்சி


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 726 |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் | |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | |

| | பக்கம் |
|---|---|
| வரவு செலவுத் திரட்டுகள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி - வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைத் திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2025, செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2025, செத்தெம்பர் மாதம் 12 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

725 - B82717 - 5403 (2025/09)

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## பூஜாபிட்டிய பிரதேச சபை

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 (1) ஆவது பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24(1) அ ஆவது உப பிரிவின் கீழ் மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தில் பூஜாபிட்டிய பிரதேச சபையினால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் பாதைகள் பூஜாபிட்டிய பிரதேச சபைக்குச் சொந்தமான பாதைகளென வெளியிடப்படுவதற்கென 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 8.1 ஆவது பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய 2025, யூலை மாதம் 08 ஆம் திகதி நடைபெற்ற பொதுச் சபையின் 1:5 ஆம் இலக்கத் தீர்மானத்துக்கமைய பூஜாபிட்டிய பிரதேச சபைக்குச் சொத்தமான பாதைகளென வெளியிடப்படுவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் இப்பிரதேசத்தின் பொதுமக்கள் அல்லது பாதையுடன் சம்பந்தப்படும் காணி உரிமையாளர்கள் எவரும் இருப்பின், தமது உரித்துரிமையை அல்லது எதிர்ப்பைக் காட்ட வேண்டுமெனின், இந்த வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து ஒரு மாத காலத்துக்குள் தமது உரித்துரிமையை நிருபிப்பதற்கென 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24(2) ஆவது பிரிவின்படி செயற்படுமாறு அறிவிக்கப்படுகின்றது.

இந்தக் கால எல்லைக்குள் எதிர்ப்புகள் எதுவும் முன்வைக்கப்படவில்லை எனின், அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதைகள் பூஜாபிட்டிய பிரதேச சபைக்கு உரித்தான பாதைகளாகக் கொள்ளப்பட்டு நிரந்தரமாகப் பராமரிக்கப்பட்டு வரும் என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

தவிசாளர்,
பூஜாபிட்டிய பிரதேச சபை,
பூஜாபிட்டிய.

பிரதேச சபை அலுவலகம்,
பூஜாபிட்டிய,
2025, ஓகத்து 12.

**அட்டவணை**

01. பாதையின் பெயர் : அலவத்த பேரகெலே பாதை
02. ஆரம்பம் : எம். ஜீ. என். ஜயசூரிய என்பவரது காணி
03. முடிவு : எம். ஜீ. ஜயதிஸ்ஸ என்பவரது காணி
04. கிராம அலுவலர் பிரிவு : அலவத்த - 538
05. நில வரைபட இலக்கம் : 26812

| | இடதுபுறம் | | வலதுபுறம் | பாதையின் நீளம் | பாதையின் அகலம் |
|---|---|---|---|---|---|
| 01. | எம்.ஜீ. என். ஜயசூரிய | 01 | எம். ஜீ. ஆரியதேவ | 2150 m | 2.4 m |
| 02. | எம். ஜீ. பீ. விமலரத்ன | 02 | டப்ளிவ். ஜீ. ஜயவிக்ரம | | |
| 03. | எம். ஜீ. என். ஜயசூரிய | 03 | டப்ளிவ். ஜீ. திலக்கரத்ன | | |
| 04. | எம். ஜீ. விமலசிரி | 04 | காந்தி ராஜபக்ஸ | | |
| 05. | எம். ஜீ. எஸ். கே. விஜேரத்ன | 05 | டப்ளிவ். ஜீ. விஜேசிங்ஹ | | |
| 06, | டி. ஜீ.முத்துமெனிகே | 06 | எம்.ஜீ. சிரியாவதி | | |
| 07. | எம். ஜீ. என். ஆரியவதி | 07 | எம். ஜீ. ஜயதிஸ்ஸ | | |
| 08. | எம். ஜீ. ஜயவிக்ரம | | | | |

| | இடதுபுறம் | வலதுபுறம் | பாதையின் நீளம் | பாதையின் அகலம் |
|---|---|---|---|---|
| 09. | டப்ளிவ். ஜீ. ஏ. தஸநாயக்க | | | |
| 10. | எம். ஜீ. சிரிவர்தன | | | |
| 11. | எம். ஜீ. கீர்த்திசிங்ஹ | | | |
| 12. | எம்.ஜீ. கே. இந்திரஜித் | | | |

01. பாதையின் பெயர் : கமே குரு பாதை
02. ஆரம்பம் : ஜே. ரொஷானா என்பவரது காணி
03. முடிவு : ஜீ. எச். ஏ. ரஸாக் என்பவரது காணி வலகடவத்த
04. கிராம அலுவலர் பிரிவு : முல்லேகம தெற்கு - 553
05. நில வரைபட இலக்கம் : 25902

| | இடதுபுறம் | | வலதுபுறம் | பாதையின் நீளம் | பாதையின் அகலம் |
|---|---|---|---|---|---|
| 01. | இசட். ஏ. எப். மொஹமட் | 01 | ஜே. ரொஷானா | 110 m | 3.0 m |
| 02. | ஜீ. எச். ஏ. ரஸாக் | 02 | ஜீ. எஸ். எம். நஸார் | | |
| | | 03 | பீ. ஏ. எம். அஸ்லம் | | |

09-12

---

**கேகாலை மாநகர சபை**

1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (ஏற்கப்பட்ட துணை விதிகள்) சட்டம்

252 ஆம் அத்தியாயமான மாநகர சபைகள் கட்டளைகள் சட்டத்தின் 267 ஆம் பிரிவின் கீழ் கேகாலை மாநகர சபைக்கு கிடைக்கப்பெற்றுள்ள தத்துவங்களின் பிரகாரம் 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்கம் கொண்ட உள்ளூராட்சி நிறுவனங்கள் (ஏற்கப்பட்ட துணை விதிகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் கௌரவ உள்ளூராட்சி அமைச்சரினால் தயாரிக்கப்பட்டு 1989 ஆம் ஆண்டு சனவரி மாதம் 20 ஆம் திகதிய 541/17 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரத்தில் வெளியிடப்பட்டதும் 1990 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 16 ஆம் திகதி சப்பிரகமுவ மாகாண சபையில் வாசிக்கப்பட்டு ஏற்கப்பட்டதாக 1990, திசெம்பர் மாதம் 27 ஆம் திகதிய 642/10 ஆம் இலக்க IV (அ) ஆம் பிரிவு மாகாண சபையின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரத்தில் வெளியிடப்பட்டு ஏற்கப்பட்ட துணை விதிகள் தொடரின் இலக்கம் 1 தொடக்கம் LVII ஆம் பிரிவு வரையில் அனைத்து பிரிவுகளையும் அவ்வாறே ஏற்றுக்ெகாள்வதற்கும், தழுவிக் கௌ்வதற்கும் செயற்படுவதற்கு 2025, ஒகத்து மாதம் 06 ஆம் திகதிய 2025/08/06/ඉ/01 ஆம் இலக்கம் கொண்ட சபை ஏற்றுக் கொள்ளுதலுடன் கேகாலை நகர சபையினால் அங்கீகரிக்கப்பட்டதாக இத்தால் அறிவித்தல் செய்யப்படுகின்றது.

ஆர். ஜீ. நிமல் கருணாரத்தின,
மாநகர முதல்வர்,
கேகாலை மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
கேகாலை,
2025, ஒகத்து 26.

09-22

---

**உடுபத்தாவ பிரதேச சபை**

மாடுகளை அறுப்பதற்கான கட்டளைச் சட்டம்

இங்கு கீழ்க் காட்டப்பட்டுள்ள அட்டவணையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவரினால் அவரது பெயரின் முன்னிலையில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் 2020 ஆம் ஆண்டு தொடக்கம் அறுக்கும் நிலையத்தை கொண்டு நடாத்துவதற்காக உரிமைப் பத்திரம் கோரி என்னிடத்தில் விண்ணப்பபத்திரம் சமர்ப்பித்துள்ளனர் என்றும் அவ் உரிமைப் பத்திரம் வழங்குவது சம்பந்தமாக

உடுபத்தாவ பிரதேச சபை அதிகாரப் பிரிவில் குடியிருக்கின்ற எவர் ஒருவர் எதிர்ப்பு தெரிவிப்பாராயின், அவர் எதிர்ப்பு தெரிவிப்பது எக்காரணத்திற்காக என்பது பற்றி 02 பிரதியுடனாக ஆவணம் ஒன்றினை இவ் அறிவித்தல் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் IV (ஆ) பகுதியில் பிரசுரிக்கப்பட்ட திகதி தொடக்கம் 14 நாட்களினுள் எனக்கு அனுப்ப வேண்டும். மாடுகளை அறுப்பதற்கான கட்டளைச் சட்டத்தின் 272 ஆம் அதிகாரத்தில் இலக்கம் 7(2) ஆம் பிரிவின் கீழ் இத்துடன் அறிவித்தல் விடுக்கின்றேன்.

**அட்டவணை**

| *விண்ணப்பதாரியின் பெயர் மற்றும் முகவரி* | *இயற்கை* | *இறைச்சிக் கூடம் கட்டப்படும் இடம்* |
|---|---|---|
| எம். எச். எம். ரியாஸ்<br>இல. 50,<br>எதுங்கஹகொடுவ. | மாடுகளை அறுப்பதற்கு | எதுங்கஹகொடுவ, மடு வீதியில் அமைந்துள்ள இந்த நிலம், திரு. எம். எச். எம். ரியாஸுக்கு சொந்தமானது |

ஜே. ஏ. நிஹால் ஜயசிங்ஹ,
தவிசாளர்,
உடுபத்தாவ பிரதேச சபை.

2025, ஓகத்து 27.

09-25

---

**காலி மா நகர சபை**

மா நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 71(1) சரத்தின் கீழ் (அதிகாரம் 252) விடுக்கப்படும் அறிவித்தல்

தேசிய அரசுப் பேரவையின் 1975 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க சாலைளைப் பெயரிடுதல் மற்றும் நினைவுத்தூபிகளை நிறுவுதலும் பராமரித்தலும் சட்டத்தின் மூன்றாவது சரத்தின் ஊடாக திருத்தப்பட்ட மா நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 71(1) ஆவது சரத்தின் பிரகாரம் (அதிகாரம் 252) மற்றும் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (தொடர்புபட்ட) ஏற்பாட்டுச் சட்டத்தின் 2(1) (அ) சரத்தின் பிரகாரம் கௌரவ தென் மாகாண ஆளுநரின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ள பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சாலை முன்னால் காட்டப்பட்டுள்ளவாறு பெயரிடப்பட்டுள்ளது என இத்தால் அறியத் தரப்படுகிறது.

ஆர். எம். டீ. கே. ரஸ்நாயக,
நகராட்சி ஆணையாளர்,
காலி மாநகர சபை.

மா நகர சபை அலுவலகம்,
காலி,

**அட்டவணை**

| *சாலையின் பெயர்* | *சாலையின் தொடக்கம்* | *சாலையின் முடிவு* | *புதிதாகப் பெயரிடப்பட்டுள்ள சாலையின் பெயர்* |
|---|---|---|---|
| அதுலனந்தாரம வீதி | வெலிபத சந்தி | மா இடிபே II ஆவது ஒழுங்கை | ‘‘சங்கைக்குரிய கபுகெம்பல அனுரவங்ஷ தேரர் மாவத்தை ’’ |

09-41

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்பட மாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு. -** இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

### அட்டவணை - 2025

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **செத்தெம்பர்** | - | வியாழன் | 04.09.2025 | - | நண்பகல் 12 | வெள்ளி | 22.08.2025 |
| | | வெள்ளி | 12.09.2025 | - | நண்பகல் 12 | வெள்ளி | 29.08.2025 |
| | | வெள்ளி | 19.09.2025 | - | நண்பகல் 12 | வியாழன் | 04.09.2025 |
| | | வெள்ளி | 26.09.2025 | - | நண்பகல் 12 | வெள்ளி | 12.09.2025 |
| **ஒற்றோபர்** | - | வெள்ளி | 03.10.2025 | - | நண்பகல் 12 | வெள்ளி | 19.09.2025 |
| | | வெள்ளி | 10.10.2025 | - | நண்பகல் 12 | வெள்ளி | 26.09.2025 |
| | | வெள்ளி | 17.10.2025 | - | நண்பகல் 12 | வெள்ளி | 03.10.2025 |
| | | வெள்ளி | 24.10.2025 | - | நண்பகல் 12 | வெள்ளி | 10.10.2025 |
| | | வெள்ளி | 31.10.2025 | - | நண்பகல் 12 | வெள்ளி | 17.10.2025 |
| **நவெம்பர்** | - | வெள்ளி | 07.11.2025 | - | நண்பகல் 12 | வெள்ளி | 24.10.2025 |
| | | வெள்ளி | 14.11.2025 | - | நண்பகல் 12 | வெள்ளி | 31.10.2025 |
| | | வெள்ளி | 21.11.2025 | - | நண்பகல் 12 | வெள்ளி | 07.11.2025 |
| | | வெள்ளி | 28.11.2025 | - | நண்பகல் 12 | வெள்ளி | 14.11.2025 |

**எஸ். டீ. பாண்டிகோறாள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.